
# இதுவரை காணாத கொடிய கிருமி

# விலகி நில்லுங்கள்; வேறு வழியில்லை

★ ஒவ்வொரு மனிதரும் எவ்வாறு மரபணு ரீதியாக வேறுபடுகிறார் என்பது போலவே, தீநுண்மங்கள்/ வைரஸ்கள் சற்று வேறுபடுகின்றன.

★ 2002 இல் சார்ஸ் சீனாவில் தோன்றி உலகம் முழுவதும் பரவியது. இது விரைவாக பரவிக் கொண்டிருந்தாலும் சில மாதங்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டது.






*கோவிட்-19 நோய்த் தொற்றை கொரோனா கிருமிகளை யாரும் குறைவாக மதிப்பிட்டு விடாதீர்கள். அலட்சியம் வேண்டாம். பாராமுகம் வேண்டாம். எந்த இடத்தில் இருந்தும் அது உடலில் பாயும் என்று எச்சரிக்கிறார் கிருமி ஆய்வியல் துறை பேராசிரியர் க.கலைமதி.*

## மலேசியா முதல் அமெரிக்கா வரை...

### பேராசிரியர் முனைவர் கலைமதி



பேராசிரியர் முனைவர் க.கலைமதி. மலேசியா, பேரா, ஈப்போவில் பிறந்து வளர்ந்து கிருமி நுண்ணுயிர் துறையில் ஆய்வு செய்தவர். தற்போது அமெரிக்காவில் புளோரிடா அனைத்துலக பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணி புரிகிறார்.


கடந்த 1992 ஆம் ஆண்டு டென்னஸ்ஸி பல்கலைக்கழகத்தில் நுண்ணுயிர் கிருமி ஆய்வியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். பொது சுகாதாரம், மற்றும் சுகாதார கொள்கைகள், அதன் நிர்வாகத் துறையில் கடந்த 2018 ஆம் ஆண்டு புளோரிடா பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டம்பெற்றவர்.

கடந்த 1999 ஆம் ஆண்டு அப்பல்கலைக்கழகத்தின் உயிரியல் அறிவியல் பிரிவில் உதவி பேராசிரியராக இணைந்தார். நுண்ணுயிர் கிருமிகள் பற்றியும் அது உடலில் ஏற்படுத்தும் பல்வேறு கூறுகள் பாதிப்புகள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்தவர்.

தடயவியல் துறையிலும் ஆய்வுகள் நடத்தி பட்டம் பெற்றவர். 110 கும் மேற்பட்ட கட்டுரைகளை புத்தகங்களை எழுதியவர். எல்லாவற்றுக்கும்மேலாக மலேசியாவில் பிரபலமான தமிழறிஞராக விளங்கிய தமிழ்க்குயில் கா.கலியபெருமாளின் புதல்வி இவர் என்பதும் குறிப்பிட்டத்தக்கது.

கோவிட்-19 நோய் நம்மையும் உலகையும் வாட்டுகின்ற நேரத்தில் இந்த நோய் தொடர்பான ஒரு விரிவான விழிப்புணர்வையும் தமது கருத்துகளையும் புலனம் வாயிலாக மலேசிய நண்பனோடு பகிர்ந்து கொண்டார். அதன் தொகுப்பு இது.

ஆறடி தூரம் ஒருவரிடமிருந்து நாம் விலகி இருக்க வேண்டும் என்பது ஏதோ விளையாட்டுக்காக சொல்லப் படவில்லை. இந்த சமூக விலகல் (சோஷியல் டிஸ்டன்சிங்) மிக அவசியமானது. ஒவ்வொரு பொருளிலிருந்தும் இந்த கிருமிகள் பரவும் என்கிறார் அவர்.



குறிப்பாக ஒரு நெகிழியில் (பிளாஸ்டிக்) படிந்து இருக்கின்ற கிருமி 72 மணி நேரம் கூட அங்கே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும். அதனால்தான் தொட்டு விடாதீர்கள். எதையும் தொட்டால் கை கழுவுங்கள் என்கிறார்கள் என்று அவர் கூறினார்.

**பல்வேறு கேள்விகளுக்கு அவர் தரும் பதில்கள் வருமாறு:**

**இந்த வைரஸ் புதியதா? முன்பே இருந்ததா?**

★ முதலாக சில வார்த்தைகளை சரியான அர்த்தத்தோடு பயன்படுத்தலாம்

★ வைரசுக்கு தமிழில் நச்சுயிரிகள்/நச்சுநுண்மங்கள் / தீநுண்மங்கள் /நச்சுநிரல்கள் (வைரஸ், virus), என்று பல பெயர்கள் உள்ளன. இங்கு நாம் தீநுண்மம் என்று சொல்வோம்.

★ இத்தீநுண்மங்களில் ஒன்றுதான் மணிமகுட தீநுண்மம் (கொரோனா வைரஸ், corona virus).

★ இந்த மணிமகுட தீநுண்ம குடும்பம் 1960இல் கண்டுபிடிக்கப்பட்டது. இது புதிது அல்ல.

★ இத்தீநுண்மங்கள் மனிதர்களுக்கும் கோழிகளுக்கும் சுவாசப்பிணியையும் பன்றிகளில் வயிற்றுப்போக்கையும் ஏற்படுத்துகின்றன.

★ இப்பொழுது நம்மை பெருங்கடுமையாக ஆட்டி வைக்கும் தீநுண்மத்திற்கு பெயர் சார்ஸ்-கோவ்-2 (SARS&CoV&2). இந்த தீநுண்மத்தினால் வரும் நுண்கிருமிப்பிணிக்குத்தான் பெயர் கோவிட் -19 (COVID&19).

★ இப்பிணி விரைவாக உலகம் முழுதும் பரவியதால் உலகம் பரவுநோய் (பாண்டெமிக், pandemic) என்று அழைக்கிறோம்.

★ இதுவரைக்கும் 1,997,906 பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். (April 14, 2020)

★ 478,557 (24%) குணமாகியுள்ளனர்

★ 126,600 (6%) உயிரிழந்தனர்

**வான்வழியாகப் பரவுகிறதா?**

★ சார்ஸ்-கோவ்-2 வான்வழியாகப் பரவுவதில்லை. இது நீர்த்துளிகள் வழியாக பரவுகிறது.

★ கோவிட் -19ஐ ஏற்படுத்தும் தீநுண்மம் சார்ஸ்-கோவ்-2 முக்கியமாகப் பாதிக்கப்பட்ட நபர் இருமும்போது, தும்மும்போது அல்லது பேசும்போது உருவாகும் நீர்த்துளிகள் மூலம் பரவுகிறது.

★ இந்த நீர்த்துளிகள் காற்றில் தொங்க முடியாத அளவுக்கு கனமானவை. அவை விரைவாக மாடிகள் அல்லது பரப்புகளில் விழுகின்றன.

★ நீங்கள் கோவிட் -19 உடைய ஒரு நபரின் 2 மீட்டருக்குள் இருந்தால், அல்லது அசுத்தமான மேற்பரப்பைத் தொட்டு, பின்னர் உங்கள் கைகளைக் கழுவுவதற்கு முன் உங்கள் கண்கள், மூக்கு அல்லது வாயைத் தொடுவதன் மூலம் தீநுண்மத்தை சுவாசிப்பதன் மூலம் நீங்கள் பாதிக்கப்படலாம்.

## இந்த வைரஸ் புதியதா? முன்பே இருந்ததா?

**ஏன் 6 அடி இடைவெளி?**

★ நாம் சுவாசிக்கும் போதும்கூட கண்ணால் பார்க்கமுடியாத நீர்த்துளிகள் நம்மிலிருந்து வெளியாகின்றன. பேசும்போது கூடவே வெளியாகின்றன.

★ ஆராய்ச்சியின் மூலம் தெரியவந்தது என்னவென்றால் இந்நீர்த்துளிகள் 3 அடிதூரம் வரைச் சென்று கீழே விழுகின்றன. நீங்கள் தும்மும்போதும் இருமும்போதும் 6அடிதூரம் வரை செல்ல வாய்ப்புண்டு.

★ இதற்குத்தான் தோழமைத் தொலைவை அதாவது (சோசியல் டிஸ்டன்ஸிங், social distancing) செயலாற்ற சொல்கிறார்கள். உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் குறைந்தது 2 மீட்டர் (6 அடி) தூரத்தை பராமரிக்குமாறு பரிந்துரைக்கிறோம். (குமுகம் - கொம்யூனிட்டி, community; சமூகம் - சொசைட்டி, ண்ணிஞ்டிடினுணுதூ; இந்த இரண்டு சொற்களும் மிகவும் வேறுபட்டவை)

★ முகமூடி அணிவது மற்றவர்களுக்குத் தீநுண்மங்கள் பரவாமல் தடுப்பதற்கான சிறந்த வழிகளில் ஒன்றாகும். தற்போது பல நகரங்களில் முகமூடி அணிவது ஒரு சட்டமாக கொண்டுவரப்பட்டிருக்கிறது.

தொடரும்...

# கோவிட்-19 வைரஸ் தாக்கத்தால் டாக்சி ஓட்டுநர்கள் பெரும் பாதிப்பு!



(பார்த்திபன் நாகராஜன்)

கோலாலம்பூர், ஏப். 18- கோவிட்-19 வைரஸ் தாக்கத்தால் தங்களின் வருமானம் பெருமளவில் பாதிக்கப் பட்டுள்ளதாக டாக்சி ஓட்டுநர்கள் வேதனையுடன் கூறியுள்ளனர்.

கோவிட்-19 வைரஸ் நாட்டில் மிகப் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

இதுவரை 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த வைரஸ்க்கு பாதிப்படைந்து ள்ளனர். 84 பேர் மரணமடைந்துள் ளனர்.

இந்த கோவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுமக்கள் வெளியில் நடமாட அரசாங்கம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

மார்ச் 18ஆம் தேதி தொடங்கிய இக்கட்டுப்பாடு ஏப்ரல் 28ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுப்பாட்டு நடவடிக்கையால் அன்றாட வருமானத்தை நம்பியிருந்தவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக வாடிக்கையாளர்கள் இல்லாததால் டாக்சி ஓட்டுநர்களின் வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

டாக்சிகளுக்கான வாடகைப் பணம் செலுத்த முடியாமல் தவித்து வருகின்றனர்.

அரசாங்கம் உதவித் திட்டங்களை அறிவித்தாலும் அன்றாட வருமானத்தை நம்பியிருந்த டாக்சி ஓட்டுநர்களுக்கு அது பற்றாக்குறையைத் தான் ஏற்படுத்தி உள்ளது.







கோவிட்-19 வைரஸில் இருந்து நாடு விரைவில் விடுபட வேண்டும் என நாங்கள் எதிர்பார்த்து வருவதாக அண்மையில் மாலிக் ஸ்டீரிம்ஸ் குழுமத்தினர் வழங்கிய உதவிப் பொருட்களை பெற்றுக் கொண்ட டாக்சி ஓட்டுநர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

இதனிடையே கோவிட்-19 வைரஸால் பாதிக்கப்பட்ட வசதி குறைந்த மக்களுக்கு மாலிக் ஸ்டீரிம்ஸ் குழுமத்தின் தலைவர் டத்தோ அப்துல் மாலிக் 1 லட்சத்து 20 ஆயிரம் வெள்ளி மதிப்புள்ள உதவிப் பொருட்களை வழங்கினார்.

800க்கும் மேற்பட்ட வசதி குறைந்த குடும்பங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், டாக்சி ஓட்டுநர்களுக்கு இந்த உதவிப் பொருட்கள் கொடுக்கப்பட்டன.

அதே வேளையில் முன்னிலையில் வேலை செய்து வரும் போலீஸ் அதிகாரிகள், மருத்துவமனை பணியாளர்களுக்கு அவர் உதவிப் பொருட்களை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரமலான் சந்தைக்குத் தடை அரசு முடிவுக்கு ஆதரவு

கோலாலம்பூர், ஏப். 18- ஆன்லைன் மூலமாக ரமலான் சந்தை நடத்துவதற்கு அனுமதி கிடையாது என்று அரசாங்கம் விடுத்த முடிவுக்கு வரவேற்பு கிடைத்திருக்கிறது.



நோன்பு மாதத்தை முன்னிட்டு வழக்கம்போல் ரமலான் சந்தைக்கு இந்தத் தடவை அனுமதி வழங்க முடியாது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது.


அப்படி சந்தைகளுக்கு அனுமதி வழங்கினால் ஏராளமானோர் திரள நேரிடும். அதன்வழி வைரஸ் தொற்று பரவும் அபாயம் ஏற்படும் என்றும் அரசாங்கம் எச்சரித்திருக்கிறது.

இந்நிலையில் அரசாங்கத்தின் இந்த முடிவை வரவேற்கிறோம் என்று மலேசிய அங்காடிக் கடைக்காரர்கள் சங்கத்தின் தலைவர் டத்தோஸ்ரீ ரோஸ்லி சுலைமான் கூறினார்.

# ஆலயங்களின் கிருமிநாசினித் தெளிப்பு நடவடிக்கை

பலாக்கோங், ஏப்.18- தற்போது ஏற்பட்டுள்ள கோவிட்-19 நோயைக் கட்டுப்படுத்தும் பொருட்டு ஸ்ரீ மகா மூகாம்பிகை ஆலயம் (செராஸ்), ஸ்ரீ சுப்ரமணியர் ஆலயம் (பலாக்கோங்), ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் ஸ்ரீ பூலாய், தேவ ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் (செராஸ் பெர்டானா) ஆகியவை ஒன்றிணைந்து கிருமிநாசினித் தெளிப்பு நடவடிக்கை அண்மையில் மேற்கொள்ளப்பட்டன.

பலாக்கோங் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வோங் சியூ கி பலாக்கோங், இந்திய சமூகத் தலைவர் கிறிஸ்டி லூயிஸ் மற்றும் சம்பந்தப்பட்ட ஆலயங்களின் தலைவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.





இந்த நெருக்கடி மிகுந்த கால கட்டத்தில் ஆலய நிர்வாகங்கள் இவ்வாறு முயற்சி மேற்கொள்வது மகத்தான செயலாகக் கருதப்படுகிறது.

அதனால் இவர்களின் இச்செயலை முன்மாதிரியாகக் கொண்டு நாட்டிலுள்ள அனைத்து ஆலய நிர்வாகத்தினரும் இதே போல் செயல்பட்டால் சிறப்பாக இருக்கும் என கிறிஸ்டி லூயிஸ் தெரிவித்தார்.

இதற்கிடையே தெராத்தாய் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், பிராயன் லாய், நகராண்மைக் கழக உறுப்பினர் மோகன் ராஜ் ஆகியோர் முயற்சியில் பாண்டான் இண்டா, தெராத்தாய் ஆகிய சட்ட மன்ற தொகுதியில் வீற்றிருக்கும் 10 ஆலயங் களிலும் கிருமிநாசினித் தெளிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையே ஒவ்வொரு தொகுதியில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் இது போன்ற கிருமிநாசி னித் தெளிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது பக்தர்களின் பாதிகாப்பை உறுதி செய்யும் என கிராமத் தலைவர் ராஜேந்திரன் கூறினார்.